பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.27.06.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு ஜூன் மாதம் 29ம் நாள் (29.06.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்:1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் மே 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் மே 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் மே 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் மே 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.6 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 பாலன் நகர் முதல் தெருவில் உள்ள சிறுபாலம் மற்றும் வடிகால் புதுப்பித்து கட்டும் பணிக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் 13.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 — திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் — 0.66% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்<br>2 — திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் — 0.03% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.03% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |
| பொருள்.7 | இந்நகராட்சிக்குட்பட்ட காட்டுப்பரமக்குடி ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் 180 மீ நீளத்திற்கு கழிவுநீர் வடிகாலின் கீழ்பகுதியில் அமைந்துள்ளதால், மேற்படி குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.1.00 லட்சம் மதிப்பீட்டில் 13.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1</td><td>திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.33% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>3.12% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.33% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
</td></tr>
<tr><td>பொருள்.8</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு தண்ணீர் வசதி, விளக்கு வசதி மற்றும் பயனிகளுக்கான இருக்கை வசதி செய்யும் பணிக்கு ரூ.2.30 லட்சம் மதிப்பீட்டில் 13.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.03% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>1.48% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.03% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
</td></tr>
<tr><td>பொருள்.9</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலன் நகர் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாக கட்டிடம் ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லாததால் பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்த அறிவிக்கையின்படி பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துமாறும் அல்லது பிற உபயோகத்திற்கோ பயன்படுத்துமாறும் அறிவுரை வழங்கி உள்ளார்கள். அதன்படி இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள காந்தி நகர் பகுதியில் உள்ள பழுதடைந்த கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்தவும், பாலன் நகர் பகுதியில் உள்ள கழிப்பறை கட்டிடத்தை நுண்ம கூட்டு மையமாக மாற்றி அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,85,000/–க்கு தயாரிக்க.பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td></tr>
<tr><td>பொருள்.10</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள உழவர்சந்தை வளாகத்தில் சுகாதாரப்பிரிவு – 3ம் பிரிவு அலுவலகம் இயங்கி வருகிறது. மேற்படி சுகாதாரப்பிரிவு அலுவலகத்தின் மேற்கூரை இடிந்து விடும் நிலையில் உள்ளதாலும், மேற்கண்ட கட்டிடத்தில் மழைக்காலங்களில் மேற்கூரையில்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>இருந்து தண்ணீர் கசிவதால் துப்புரவு பணியாளர்களின் வருகை பதிவேடு எடுக்க முடியாமல் உள்ளதாலும், மேற்கண்ட கட்டிடத்திற்கு பதிலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் புதிதாக பிரிவு அலுவலகம் கட்டவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3,75,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 கீழப்பள்ளிவாசல் தெருவில் புதிதாக கழிவுநீர் கால்வாய் கட்டும் பணிக்கு ரூ.1.70 லட்சம் மதிப்பீட்டில் 13.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ். சசிவர்ணம், ஒப்பந்ததாரர்</td><td>0.04% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>2.49% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சசிவர்ணம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.04% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 36 வார்டுகளில் உள்ள பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் மெயின் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்து பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்த குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/—க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2929/2016/இ3, நாள்.13.10.2016ன்படி தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தில் பரமக்குடி நகராட்சி பகுதியில் வார்டு எண்.18ல் மீன் கடை தெருவில் உள்ள மீன் மார்க்கெட்டில் புதிய நவீன மீன் விற்பனை அங்காடி கட்டும் பணிக்கு ரூ.100.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதின் அடிப்படையில், நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, 24.03.2017ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 06.04.2017ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது.<br>மேற்படி பணியில் கடைகள் கட்டுமான பணிகள் முடிவுற்றுள்ளது. தரை தளத்தில் டைல்ஸ் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டுமான பணி நடைபெறும் போது, மீன்வளத்துறை இயக்குநர் அவர்கள் நேராய்வு செய்தார்கள். நேரடி ஆய்வின் போது புதிதாக கட்டப்பட்டு வரும் மீன் அங்காடிக்கு வைகை ஆற்றுக்கரையின் சர்வீஸ் சாலையிலிருந்து அணுகு சாலை பாதை (approach) அமைக்குமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள். இதன்படி சர்வீஸ் சாலையிலிருந்து மீன் அங்காடிக்கு பாதை அமைத்து</td></tr>
</table>

| | |
|---|---|
| | வாகன நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், சாலையின் ஓரத்தில் அமைந்துள்ள கழிவறையின் முன்பக்க மறைப்பு சுவர் (Screen wall) அகற்ற வேண்டியுள்ளது. எனவே, மீன் மார்க்கெட் பகுதியில் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தை அகற்றவும், முன்புற கழிவறையின் மறைப்பு சுவரை அகற்றவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கட்டுமானப்பணியை விரைந்து முடிக்க ஏதுவாக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றம் அங்கீகரிக்கலாம். |
| பொருள்.14 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மக்கள் மஞ்சள்பட்டிணம் மயானத்திற்கு அருகில் புதிதாக சமுதாய கழிப்பறை தூய்மை பாதம் 2016–17ன் கீழ் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி முடிக்கப்பட்ட கழிப்பறை கட்டிடத்தில் பூச்சுவேலை, டைல்ஸ் வேலை, கதவு, கிராதி பொருத்துதல் வயரிங் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச மதிப்பீடு ரூ.2.55 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | பொதுசுகாதார டம்பர் பிளேசர் வாகனம் TN 65W 0802க்கு வருடாந்திர தகுதிச்சான்று 07.02.2018ந் தேதியுடன் முடிவடைந்து வாகனம் தற்போது இயக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், வருடாந்திர தகுதிச்சான்று பெறுவதற்கு பழுதுபணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனர் தெரிவித்ததன் அடிப்படையில் உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட உள்ளூர் பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.79250/–க்கும் 2) செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.83000/–க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>அதன்படி நகர் மன்றத்தின் பின்யேற்பினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் 12.06.2018ம் தேதிய முன் அனுமதியின்படி இந்நகராட்சி பொதுசுகாதார டம்பர் பிளேசர் வாகனம் TN 65W 0802க்கு FC பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 28.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. |

| வ.எண் | பழுதுபணிகளின் விபரம் | என். கணபதி மோட்டார்ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | TN 65W 0802க்கு FC பழுதுபணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.79250 | ரூ.83000 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுபணிகள் மேற்கொள்ளஒப்பந்தப்புள்ளி வழக்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு—

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) தனி அலுவலர் அவர்களின் 12.06.2018ம் தேதிய முன் அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

3) குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

4) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.783/2018/எச்2

**பொருள்.16**

பொதுசுகாதார டிராக்டர் டிரைலர் வாகனம் TN 65C 8406க்கு வருடாந்திர தகுதிச்சான்று 20.06.2018 ந் தேதியுடன் முடிவடைந்து வாகனம் தற்போது இயக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், வருடாந்திர தகுதிச்சான்று பெறுவதற்கு பழுதுபணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனர் தெரிவித்ததன் அடிப்படையில் உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட உள்ளூர் பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.62750/—க்கும் 2) செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.66000/—க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.

அதன்படி நகர் மன்றத்தின் பின்யேற்பினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் 12.06.2018ம் தேதிய முன் அனுமதியின்படி இந்நகராட்சி பொதுசுகாதார டிராக்டர் டிரைலர் வாகனம் TN 65C 8406க்கு FC பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 28.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.

| வ.எண் | பழுதுபணிகளின் விபரம் | என். கணபதி மோட்டார்ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | TN 65C 8406க்கு FC பழுதுபணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.62750 | ரூ.66000 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுபணிகள் மேற்கொள்ளஒப்பந்தப்புள்ளி வழக்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு—

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) தனி அலுவலர் அவர்களின் 12.06.2018ம் தேதிய முன் அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

3) குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

4) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.783/2018/எச்2

| | |
|---|---|
| பொருள்.17 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுரையின்பேரில் நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்தின் பண்புகளை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பிட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளின் மாதிரிகளை அரசு அங்கீகாரம் பெற்ற பரிசோதனை நிலையம் “கிரீன் லிங்க் அநாலைடிக்கல் ரிசர்ஜ் லேபோரேட்டரி, கோயம்புத்தூர்“ நிறுவனத்திடம் மாதிரி ஒன்றுக்கு ரூ.6000/– வீதம் இதர செலவினங்களுடன் மொத்தமாக ரூ.8000/–ம் உத்தேச செலவினத்தில் பரிசோதனை செய்து ஆய்வு அறிக்கை பெற்றிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கியும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | இந்நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப்பணியாளர்கள், பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது.<br>**I. பொதுசுகாதாரப்பிரிவு**<br>1. ஆண் துப்புரவுப்பணியாளர்கள் – 50<br>2. பெண் துப்புரவுப்பணியாளர்கள் – 24<br>3. துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் – 8<br>4. பொதுசுகாதார ஓட்டுநர்கள் – 6<br>5. பொதுசுகாதார துலக்குநர் – 1<br>6. மருத்துவ ஆயா – 3<br>**II . பொதுப்பிரிவு**<br>1. அலுவலக உதவியாளர்கள் – 6<br>2. காவலர்கள் – 1<br>**III. பொறியியல் பிரிவு**<br>1. அலுவலக உதவியாளர் – 1<br>2. மின்பிரிவு பணியாளர்கள் – 5<br>3. குடிநீர் பணியாளர்கள் – 12<br>4. ஓட்டுநர்கள் – 3<br><br>மேற்கண்ட பணியாளர்களில் ஆண் துப்புரவுப்பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேன்ட் சட்டைகள், பெண் துப்புரவுப்பணியாளர்கள் ஒரு பெண் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் மருத்துவ ஆயாக்களுக்கு இரண்டு ஜோடி சேலை ஜாக்கெட்டுகள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் பேன்ட் சட்டைகள், குடிநீர் மற்றும் மின்பிரிவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேன்ட் சட்டைகள், பொது சுகாதார ஓட்டுநர்கள் மற்றும் பொறியியல் பிரிவு ஓட்டுநர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேன்ட் மற்றும் இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் சட்டைகள், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளைநிற சட்டையும், |

| | |
|---|---|
| | இரண்டு ஜோடி காக்கி பேன்டும் மற்றும் அவைகளுக்குண்டான தையல் கூலி மற்றும் துப்புரவுப்பணியாளர்கள் மற்றும் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களுக்கு காலணிகளும், ஓட்டுநர்களுக்கு தோல் ஷுக்களும் ரூ.3.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் வாங்கி வழங்குவதற்கும், சீருடைகளை அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷுக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. சீருடைகளை அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷுக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**19** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு போதுமான வகுப்பறை வசதி இல்லாததால் கூடுதல் கட்டிடம் கட்டுதருமாறு அப்பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்படி பள்ளி வளாகத்தில் பள்ளி குழந்தைகளின் நலன் கருதி முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணிக்கு ரூ.9,90,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**20** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் நகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்திற்கு தண்ணீர் வசதி, குழந்தைகளுக்கான கழிப்பறை வசதி மற்றும் கட்டித்திற்கு வர்ணம் பூசும் பணி மற்றும் இதர மராமத்துப்பணிகள் செய்து தருமாறு அப்பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்படி பள்ளி வளாகத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்தும் கழிப்பறை வசதி மற்றும் இதர மராமத்துப் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9,40,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**21** | பரமக்குடி நகராட்சியில் குழல் விளக்குகள் 1805 எண்ணம், 1X250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் —47 எண்ணம், 1X150 வாட்ஸ் சோடியம் விளக்குகள் – 217 எண்ணம், உயர்கோபுர விளக்குகள் – 3 எண்ணம் 1X24 வாட்ஸ் டி5 விளக்குகள் — 135 எண்ணம், 2X24 வாட்ஸ் டி5 70 வாட்ஸ் சி.எப்.எல் விளக்குகள் – 5 எண்ணம் ஆக மொத்தம் 2532 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு பராமரிப்புப்பணிக்கு மின்கம்பியாளர் 3 இடம் மற்றும் மின்கம்பி உதவியாளர் 3 இடம் பணி அனுமதிக்கப்பட்டு பராமரிப்புப்பணி பார்க்கப்பட்டு வந்தது. தற்பொழுது 2 மின்கம்பியாளர்கள் ஓய்வு பெற்றதை தொடர்ந்து 3 மின்கம்பி உதவியாளர்கள், |

| | |
|---|---|
| | மின்கம்பியாளராக பதவி உயர்வு பெற்று பணி செய்து வருகிறார்கள். பதவி உயர்வு அளிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் 2 இடமும், ஒரு மின்கம்பியாளர் நீண்ட காலமாக பணிக்கு வராமல் இருப்பதாலும், மின்கம்பி உதவியாளர் ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ விடுப்பில் இருப்பதாலும் தற்போது காலியான நிலையில் உள்ளது.<br>தெருவிளக்கு பணிகளை தனியார் மயமாக்குவதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி 2 இடங்கள் காலியாகவும், 2 இடங்கள் விடுப்பில் காலியாகவும் உள்ளதால், பராமரிப்புப்பணியில் தொய்வு ஏற்படுகிறது. மேலும் மழைகாலமாக இருப்பதாலும், தெருவிளக்கு பராமரிப்புப்பணியை தொய்வின்றி செய்வதற்கு காலியாக உள்ள மின்கம்பி உதவியாளர் 3 நபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டி விலைவிகிதத்தின்படி 01.07.2018 முதல் 31.12.2018 வரை தனியார் மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு தெருவிளக்குப்பணி தொய்வின்றி நடைபெறுவதற்கு சுமார் 6 மாத காலத்திற்கு (டிசம்பர் 2018 வரை) ஊதியம் வழங்க ரூ.1,60,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**22** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8ல் ஜீவா நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் டைல்ஸ் பதித்தல், கதவு பொருத்துதல், மின்வசதி மற்றும் தண்ணீர் வசதி மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், மேற்படி கழிப்பறையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு மேற்படி பணிகளை செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.3.70 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**23** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, 5, 30 மற்றும் 36ல் பழுதடைந்த நிலையில் உள்ள 4 எண்ணம் சிறு பாலங்கள் போக்குவரத்திற்கும், பொதுமக்களின் உபயோகத்திற்கும் உகந்த வகையில் சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.**24** | இந்நகராட்சியில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் வாரியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தினசரி சராசரியாக 25 லட்சம் தண்ணீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு நீரேற்றம் செய்யப்பட்டு வரும் நீரினை அளவீடு செய்ய இயலாததால், மேற்படி வாரியத்தினருக்கு தொகை செலுத்துவதில் சரியான கணக்கீடு செய்ய இயலாத நிலை |

| | |
|---|---|
| | உள்ளது. மேலும், தற்பொழுது 1000 லிட்டருக்கு ரூ.4.50 வீதம் செலுத்தி வருவதில் 01.04.2018 முதல் 1000 லிட்டருக்கு ரூ.9.45 என கணக்கிடப்பட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தண்ணீருக்கான கட்டணம் இரு மடங்காக அதிகமாக உள்ளதால் நீரேற்றம் செய்யப்பட்டு வரும் நீரினை அளவுமானி மூலம் கணக்கிட்டு அதன்படி தண்ணீர் கட்டணம் செலுத்தும் பொருட்டு மேற்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிங் செய்யப்பட்டு வரும் 300mm விட்டமுள்ள 2 குழாய்களில் 2 எண்ணம் அளவுமானி பொருத்துவதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.3,60,000/—க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு —<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் வாரியாக நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.25 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜீவாநகர், உழவர் சந்தை அருகில், கோகுலர் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு அதன்மூலம் அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் ஏற்கனவே உள்ள ஏணி முற்றிலும் பழுதடைந்துவிட்டது இதனால் குளோரினேசன் சரிவர செய்ய இயலவில்லை. எனவே, மேற்படி ஏணியை கழற்றி புதிதாக Zig -zag முறையில் இரும்பு ஏணி அமைக்கவும் மற்றும் மராமத்துப் பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.250000/—க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு —<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.26 | பரமக்குடி நகராட்சியில் சி.எஸ்.எம்.போர்டிங் சாலையில் போக்குவரத்து கழக பணிமனை அருகில் நவீன ஆட்டு இறைச்சிக்கூடம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஆடடி சாலையில் தினமும் சுமாராக 6 முதல் 8 வரையிலான ஆடுகள் உரிய பரிசோதனைக்கு பின் வதை செய்யப்பட்டு சுகாதாரமான முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட சுற்றுசூழல் அலுவலக நடப்பு குறிப்பாணை எண்.மா.சூ.பொ/இராம/வீகே/2018, நாள்.06.02.2018ன்படி எந்த ஒரு நிறுவனமும், கழிவு நீரை வெளியேற்ற சம்மந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணையை பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இதன்படி மேற்படி நவீன சுற்றுசூழல் அலுவலகத்திற்கு கோரப்பட்ட அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட்டது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்த பின் 2007—08 முதல் நாளது தேதி வரையிலான காலத்திற்கு Water Act & Air act ஆகியவற்றிற்கான கட்டணம் ரூ.42,400/— செலுத்த கோரி கடிதம் வழங்கியுள்ளார்கள். இதன்படி மேற்படி கட்டணம் ரூ.42,400/—ஐ செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு —<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.27 | நகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் மூலம் பள்ளிகளுக்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது வறட்சி காலம் நிலவி வருவதால் பள்ளிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்கள் அடிக்கடி பழுதாகி விடுகிறது. இதனால் குழந்தைகளுக்கு தண்ணீர் இல்லாததால் கழிப்பறை பயன்படுத்துவதில் இடையூறு ஏற்படுகிறது. எனவே, குழந்தைகளின் நலன் கருதி மேற்படி அனைத்து பள்ளிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் பள்ளிகளுக்கு புதிதாக மோட்டார் |

| | |
|---|---|
| | பொருத்தவும் பழுது நீக்கம் செய்ய இயலாததால் புதிதாக மாற்று 1.5 HP நீர் மூழ்கி மோட்டார்கள் வாங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், ஏற்கனவே கல்வி நிதியின் கீழ் காட்டுப்பரமக்குடி மணி நகர் பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிக்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொண்டதில் இதுவரை ரூ.435315/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மீதமுள்ள தொகைக்கு பள்ளி கட்டிடங்களில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு தேவையான மாற்று மின்மோட்டார்கள் 5 எண்ணம் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை மேற்படி மதிப்பீடு தொகைக்குள்ளேயே மேற்கொள்ளவும் மேற்படி பணி செய்யும் ஒப்பந்ததாரர் மூலமே விநியோகம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**28** | தூய்மை இந்தியா திட்டம் சுவட்ச் பாரத் மிஷன் தலைப்பின் கீழ் தினசரி நகர் பகுதிகளில் சேகரம் செய்யப்பட்டு வரும் திடக்கழிவுகளில் மட்கும் குப்பைகளை சேகரம் செய்யும் பொழுதே தரம் பிரித்தும் அவற்றை மட்கச் செய்து உரம் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தூய்மையான நகரமாக மாற்றம் செய்யலாம் என்ற நோக்கத்தில் தான் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>அதனடிப்படையில் பரமக்குடி நகர் பகுதிகளில் தினசரி தெருக்களில் சேகரம் செய்யப்பட்டு வரும் மட்கும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே உரம் தயாரிக்கும் பணிக்காக Onsite composting முறையை செயல்படுத்தும் பொருட்டு நகரில் 40 இடங்களில் 4 அடி விட்டமுள்ள ஆர்.சி.சி. உறை 4 எண்ணம் வீதம் 160 எண்ணம் உறைகள் வாங்கி அவற்றிற்கு இரும்பு தகட்டிலான மூடியுடன் கூடிய இனாம்பு மற்றும் கதவு வசதி செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**29** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வண்டி எண்.டி.என்.65 7974 குடிநீர் வாகனத்திற்கு தகுதிச்சான்று நடப்பாண்டிற்கு பெற வேண்டியுள்ளதால், மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய உள்ளூர் நிறுவனத்தினரிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், மதுரை மண்டபம் ரோடு, பரமக்குடி. – ரூ.25000/–<br>2. செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், அண்ணா நகர், பரமக்குடி. – ரூ.26750/–<br><br>மேற்படி குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.30 | இந்நகராட்சியில் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் குப்பைகளில் மட்கும் குப்பைகளை ஆங்காங்கே onsite composting முறையில் உரம் தயாரிக்கும் பொருட்டு, ஏற்கனவே பழுதடைந்த நிலையில் பயன்படுத்த இயலாத 7 எண்ணம் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பி.வி.சி சின்டெக்ஸ் தொட்டிகளில் சுற்றிலும் 11/4 இன்ச் விட்டத்திற்கு துளையிட்டும் கீழ் பகுதியில் (பக்கவாட்டில்) திறந்த மூடுவதற்கு ஏற்ப கதவு போன்ற அமைப்பு செய்யவும் மற்றும் பெயிண்டிங் மூலம் எழுதிகொடுக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. என்.ஏ.எம். இண்டஸ்ட்ரீஸ், பரமக்குடி – ரூ.1345/– (ஒரு எண்ணம்)<br>2. எம்.எம்.ஹார்ட்வேர்ஸ், பரமக்குடி. – ரூ.1450/– (ஒரு எண்ணம்)<br>மேற்படி வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய என்.ஏ.எம். இண்டஸ்ட்ரீஸ், பரமக்குடி. என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.31 | திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர் பகுதிகளில் தினசரி சேகரிக்கப்ட்டு வரும் குப்பைகளில் மட்கும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே Onsite composting முறையை அமுல்படுத்துமாறு 17.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், இப்பணியை எளிய மற்றும் நவீன முறையில் HDPE யினால் ஆன Vermibed அமைத்தும் நுண்ம கூட்டு மையங்கள் அமைத்து செயல்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் மூன்று இடங்களில் நுண்ம கூட்டு மையம் Vermibed வுடன் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4500000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். |
| பொருள்.32 | மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டார போக்குவரத்து உரிமம் இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.18292/ஏ2/2018, நாள்.21.06.2018ன்படி பரமக்குடி நகராட்சி பேருந்து நிலையம் சி பிரிவில் இருந்து பி பிரிவாக தரம் உயர்த்தப்பட்டு 28.04.2018 முதல் 27.04.2019ம் தேதி வரை ஓராண்டு புதுபித்தும் மற்றும் பேருந்துகள் நுழைவு கட்டணம் ரூ.8.00ல் இருந்து ரூ.12.00 ஆக உயர்த்தப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும் பொது ஏலம் கோரவும் அதற்கான செலவு தொகை உத்தேச மதிப்பீடு ரூ.50,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | |
| பொருள்.33 | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் புதிதாக வாங்கப்பட்டுள்ள வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 10 ஓட்டுநர்களைக் கொண்டு ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கும் பொறுட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது. புதிய நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்படும் வரை தற்போது பணி செய்து வரும் Clean care service centre, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.07.2018 முதல் 31.07.2018 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு பழைய ஊதிய விகிதத்தில் பணி மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. Clean care service centre, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.07.2018 முதல் 31.07.2018 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு பழைய ஊதிய விகிதத்தில் பணி மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.17.06.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு ஜூன் மாதம் 18ம் நாள் (18 .06.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.01.1999ன்படி நகராட்சி பகுதியில் தொழில்புரிவோர் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிவோருக்கும், தொழில்வரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124(4) ஆணை பிரிவு 13ன்படி தொழில் வரியினை திருத்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள கீழ்கண்டவாறு உள்ள தொழில் வரியை 25 சதவீதத்திற்கு குறையாமல் 35 சதவீதத்திற்கும் அதிகமாகமலும் தொழில்வரி திருத்தம் செய்து 01.10.2018 முதல் அமுலாக்கம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது. |

| வ. எண் | சராசரி 6 மாத வருமானம் | தற்போது வசூல் செய்யப்படும் தொகை | சீராய்வு செய்யப்படும் சதவிகிதம் | சீராய்வு செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ரூ.21000 வரை | இல்லை | 30% | இல்லை |
| 2 | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 129 | 30% | 168 |
| 3 | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | 324 | 30% | 421 |
| 4 | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | 635 | 30% | 826 |
| 5 | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | 959 | 30% | 1247 |
| 6 | ரூ.75001 மற்றும் அதற்கு மேல் | 1250 | Not Exceed Rs.1250/- half year | 1250 |

அலுவலகக்குறிப்பு –

01.10.2018 முதற் தற்போதுள்ள 6 மாத தொழில்வரியினை 25 சதவீதத்திற்கு குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் தொழில் வரியினை சீராய்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

Article 276 clause (2) Constitution of Indiaன்படி தொழில்புரிவோர் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிவோர் தொழில்வரித் தொகை செலுத்துவது ஆண்டிற்கு ரூ.2500/–க்கு மிகாமல் இருக்க வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்12503/2018/ஆர்1, நாள்.21.05.2018ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதன்படி தொழில்வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3661/2008/அ3

| | |
|---|---|
| பொருள்.2 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.10945/பி3/2015–1, நாள்.12.07.2015ல் 4வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி பரமக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்திட கலவை உரக்கிடங்கில் அடிப்படை கட்டுமானப் பணிகள் செய்வதற்கும், 10 வாகனங்கள் புதிதாக வாங்குவதற்கும் ரூ.519.80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாகனங்கள் வாங்கப்பட்டு, மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 10 ஓட்டுநர்களை நகர்மன்ற தீர்மான எண்.1874, நாள்.19.09.2016ன்படி குறைந்தபட்ச விலை குறிப்பிட்ட Clean care service centre, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவும், அதனை தொடர்ந்து பணி நீட்டிப்பு உத்தரவுகளும் வழங்கப்பட்டு 01.10.2016 முதல் இன்று வரை ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு 1 1/2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால், புதிதாக ஒப்பந்தப்புள்ளிக்கோரி ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் புதிய ஊதிய விகிதத்தின்படி கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>10 ஓட்டுநர்கள் x ரூ.493/– (EPF உட்பட) x 365 நாட்கள் = ரூ.1799450/–<br>ESI (4.75%) = ரூ.85474/–<br>நிர்வாக செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் = ரூ.179945/–<br>––––––––––––<br>மொத்தம் = ரூ.2064869/–<br>––––––––––––<br>மேற்கண்டவாறு ரூ.21.00 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் (ஓட்டுநர் பணிகள்) முன் அனுபவம் உள்ள தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிக்கோரி ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.21.00 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் (ஓட்டுநர் பணிகள்) முன் அனுபவம் உள்ள தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிக்கோரி ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி